

அத்தியாச்சிரம சுத்தாத்துவைத வைதிக சைவ சித்தாந்த ஞானபானு
பாம்பன் ஸ்ரீமத் குமாரகுருதாஸ ஸ்வாமிகள் (1848-1929)

# பாம்பன் ஸ்வாமிகள் வாழ்க்கை வரலாறும் போதனைகளும்


மூலக் கட்டுரை ஆங்கிலத்தில் -
வி.என்.சுந்தர்ராஜன்
படங்கள்-ஸ்ரீனிவாசன்

( Pamban Swamigal-His Life Example & Teachings by VN Soundararajan
Appavu Research Foundation, Chennai
drawings by Srinivasan)

தமிழ் மொழி பெயர்ப்பு -
சாந்திப்பிரியா
(nrj_1945@yahoo.com)


---

1848 ஆம் ஆண்டு இராமேஸ்வரத்தில் பாம்பன் என்ற இடத்தில் இருந்த ஒரு சைவ வழியைச் சார்ந்த தம்பதியினருக்கு ஒரு குழந்தைப் பிறந்தது. அதற்கு அப்பாவு எனப் பெயர் சூட்டினர். வயது வந்ததும் தன்னுடைய குடும்பத்தை விட்டு வெளியேறிய அந்தக் குழந்தையே பின்னர் பாம்பன் ஸ்வாமிகள் என அழைக்கப்பட்டார். சிறு வயதிலேயே படிப்பிலும் அறிவிலும் சிறந்து விளங்கிய அந்தக் குழந்தை பிற்காலத்தில் மாபெரும் ஞானியாக புகழ் பெற்று விளங்குவார் என ஜோதிடர் கூறினார். ஆங்கிலத்திலும், தமிழிலும் நல்ல புலமைப் பெற்றவர் அப்பாவு.

அவருடைய பதிமூன்றாம் வயதில் அவர் கனவில் வந்த எவரோ ஒருவர், குமாரகுருக் கடவுள் மீது பாடல்களை இயற்றுமாறு கூற, அவரும் தேங்காய்த் தோப்பில் அமர்ந்த வண்ணம் அதை பனை ஓலையில் எழுதலானார். தன்னுடைய மானசீக குருவாக அருணகிரி நாதரை எண்ணிக் கொண்டு சாப்பாட்டு இடைவேளையில் தினமும் ஒரு பாடல் என்று எழுதத் துவங்கி, தொடர்ந்து நூறு நாட்களில் அதை எழுதி முடித்தார். அதைப் பார்த்த சேது மாதவ ஐயர் என்ற ஆலய புரோகிதர் அப்பாவுவிற்கு முருகக் கடவுள் மீது இருந்தப் பக்தியைப் புரிந்து கொண்டார். அதனால் சேது மாதவ ஐயர் விஜயதசமி அன்று அப்பாவுவிற்கு ராமேஸ்வரத்தில் இருந்த அக்னி தீர்த்தம் என்ற இடத்தில் ஆறு அட்சரத்தில் மந்திரோபசேதம் செய்து வைத்தார்.

இளமைப் பருவத்திலேயே தெய்வீக வாழ்வை விரும்பி ஏற்ற அப்பாவுவிற்கு அவருடைய பெற்றோர்களும் சேது மாதவ ஐயரும் திருமணம் செய்து வைத்து விட விரும்பினர். காளிமுத்தமி என்ற ஒருவளுக்கு அவரை மணம் முடித்து வைக்க, அவள் மூலம் அவர்களுக்கு ஒரு மகனும் இரண்டு புதல்விகளும் பிறந்தனர். திருமணம் ஆனாலும் கூட பாம்பன் ஸவாமிகள், பெரும்பாலும் பூஜைகள் போன்றவற்றை செய்து கொண்டு துறவி போலவே வாழ்ந்து வந்தார். தன் தந்தையின் மரணத்தக்குப் பின் பாம்பன் ஸ்வாமிகள் அவருடைய தொழில்களை தானே ஏற்று நடத்திக் கொண்டு முருகனின் அருளால் பல வழக்குகளில் வெற்றிப் பெற்றார். ஒரு நாள் பாம்பன் ஸ்வாமிகளின் மகள்

உடல் நலமின்றிப் போய் அழத் துவங்கினாள். அவருடைய மனைவி அவரிடம் வீபுதி மந்தரித்துக் கொடுக்கும்படிக் கூற, அவர் அதற்கு மறுத்து விட்டு அவன் குணமடைய வேண்டும் எனில் முருகனைப் பிரார்திக்கும்படிக் கூறிவிட்டார். அதன் பின் தானும் முருகனிடம் வேண்டி பிரார்தனை செய்யலானார்.

அவளும் பாம்பன் ஸ்வாமிகள் கூறியபடியே முருகனைப் பிரார்திக்க குழந்தை அமைதியாகி உறங்குவதைக் கண்டார். அது பற்றி தன மனைவியிடம் அவர் கேட்க அவள் தான் முருகனைத் துதித்த பின் ஒரு வயதானவர் வீட்டிற்கு வந்து குழந்தையின் நெற்றியில் வீபுதியைத் தடவி விட்டுச் சென்றதாகக் கூறினாள். குழந்தை நலம் அடைந்தது. கடவுள் முருகனே அன்று வந்திருந்துத் தன் குழந்தையைக் காப்பாற்றி இருக்கின்றார் என்பதை உணர்ந்தார். ஒரு நாள் பாம்பன் ஸ்வாமிகளின் நண்பர் ஒருவர் அவரிடம் வந்து தான் பழனி மலைக்குச் செல்ல இருப்பதாகக் கூற, பாம்பன் ஸ்வாமிகளுக்கும பழனிக்குச் செல்ல ஆசை வந்தது. வீட்டில் எவரிடமும் கூறாமல் அவரும் கிளம்பி விட்டார்.



***தன் மகள் குணமடைய மனைவியுடன் சேர்ந்து கொண்டு கடவுளை வேண்டிய பாம்பன் ஸ்வாமிகள்***

'அதற்கு கடவுள் அனுமதி கொடுத்து விட்டாரா ?' என்று அவருடைய நண்பர் கேட்க கொடுத்து விட்டார்' என்று பொய் சொன்னார் பாம்பன் ஸ்வாமிகள். அன்று இரவே அவர் கனவில் தோன்றிய முருகன் " நீ மலைக்கு வர வேண்டும் என்று நான் எண்ணினால் நானே ஏற்பாடு செய்து இருப்பேன். ஆதனால் நீ இப்பொழுது வர வேண்டாம், எப்பொழுது வர வேண்டும் என்பதை நானே கூறுகிறேன். அதற்காக ஏன் பொய் சொல்கின்றாய். உலகப் பற்று இன்றி நீ வீட்டிலேயே இனிமேல் இரு " என்று கூறினார்.

ஒரு முறை கரடு முரடான வீதியில் பாம்பன் ஸவாமிகள் நடந்து சென்று கொண்டு இருக்கையில் முட்களும், கற்களும் கால்களில் குத்தி வேதனைத் தர, வலியினால் துடித்துப் போனவர் முருகனிடம் மனமாற பிரார்தனை செய்தார். அன்று இரவு செருப்புத் தைக்கும் தொழிளாளி ஒருவன் கனவில் முருகன் தோன்றி கஷ்டப்படும் தன் பக்தனான அவருக்கு ஒரு ஜோடி செருப்புத் தைத்துத் தருமாறு கூற, மறு நாள் அந்த செருப்புத் தைப்பவன் அது போலவே ஒரு ஜோடி செருப்பைத் தயார் செய்த பின்அதை எடுத்துப் போய் பாம்பன் ஸ்வாமியிடம் கொடுத்து " எனக்கு கனவில் தோன்றிய முருகப் பெருமான் ஆணையிட்டபடி இதை உங்களுக்குக் கொடுக்கின்றேன் " என்று கூற தன்னுடைய பக்தர்களுக்கு முருகப் பெருமான் எப்படி எல்லாம் கருணையை காட்டுகின்றார் என்பதை எண்ணி வியந்தார பாம்பன் ஸவாமிகள்.

ஒருமுறை பாம்பன் ஸ்வாமிகள் பேதியினால் அவதிப்பட்டு மயக்கம் அடைந்து விட்டார். அதைக் கண்ட அவர் மனைவியும் மயக்கம் அடைந்து விட்டாள். முருகப் பெருமான் அவர் வீட்டிற்கு ஒரு மனித உருவில் வந்து கழியினால் அவளைத் தட்டி எழுப்பிய பின் "அவர் உடல் முழுவதும் வீபுதியைத் தடவி விடு . மேலும் உன்னை விட்டு விட்டு நான் வேறு எங்கும் செல்ல மாட்டேன் என்று அவர் காதுகளில் கூறு " என்று சொன்னார். ஆனால் அவள் வீட்டு விலக்கில் இருந்ததால்

அதை செய்ய மறுக்க முருகனும் ஆபத்திற்கு பஞ்சம் இல்லை எனவும் தான் கூறியபடி செய்யும்படி அவளை வற்புறுத்த அவளும் அதைச் செய்தாள். பாம்பன் ஸ்வாமிகள் நலமடைந்து எழுந்தார். ஒரு நாள் பாம்பன் ஸ்வாமிகளிடம் வந்த ஒருவர் இரண்டு மாதங்கள் ஆகியும் நூறு பாடல்களைக் எழுதி முடிக்க முடியாமல் ஒரு கவிஞன் கஷ்டப்படுகிறான் என்று கூற, உடனேயே அதற்கு இணையாக 125 பாடல்களைக் கொண்ட திருவாறு மலை கோமகன் ( ***Tiruvorumalai Komagan*** ) என்ற பாடல் ஒன்றை, ஒரு மணி நேரத்தில் எழுதி முடித்தார். அதற்கு இணையாக இன்று வரை எவரும் அப்படி ஒன்றை எழுதவில்லை. வரிக்கு 64 வார்த்தைகள் என முதல் பாடல் அமைய நாலு வரிகளில் 256 வார்த்தைகளைக் கொண்டு அந்த பாடல் அமைந்தது. மற்ற 124 பாடல்களையும் வேறு எந்த புது வார்த்தைகளையும் சேர்க்காமல் எழுதி முடித்தார். இறைவன் அருள் இருந்தால் எதையும் செய்ய முடியும் என்று அவர் கூறினார்.

ஸ்வாமிகள் ஒருமுறை காஞ்சிபுரம் சென்றிருந்த பொழுது பிரபலமாக இருந்த குமாரக் கோட்டத்திற்கு செல்லாமல் இருந்து விட்டார். அங்கிருந்துத் திரும்பும் வழியில் தலையில் முண்டாசு கட்டிய 30 வயதுத் தோற்றம் கொண்ட ஒருவர் அவரிடம் வந்து " நீங்கள் எப்பொழுதாவது குமாரக் கோட்டத்திற்குப் போய் இருக்கின்றீர்களா ........ காஞ்சியப்ப சிவாச்சாரியார் என்ற ஆலய பண்டிதர் கந்தப் புராணம் இயற்றி வருவது தெரியுமா?" என்றும் கேட்டார். அப்படிக் கேட்டுவிட்டு அவரை அந்த ஆலயத்தின் அருகில் அழைத்துச் சென்று அங்கு விட்டபின் மறைந்து விட்டார். இரெயில் நிலையத்திலோ வேறு எதோ ஒரு காரணத்தினால் வண்டி கிளம்பாமல் ஸ்வாமிகளின் வருகைக்காக காத்திருப்பது போல நின்று கொண்டு இருந்தது. கந்தனின் கருணையைக் கண்டு ஸ்வாமிகளுக்குப் புல்லறித்தது.

1894 அம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்த பீரப்பன் வலசை என்ற இடத்தில் இருந்த ஸ்வாமிகள் தான் குமாரப் பழனி ஆண்டவரிடமே நேரடியாக உபதேசம் பெற வேண்டும் என்ற வைராக்கியத்தில் இருந்தார். ஆகவே அரசு அதிகாரிகளின் அனுமதியைப் பெற்று ஒரு மயானத்தில் 3' x 3' x 3' அளவில் ஒரு அறைக் கட்டி அதில் தன்னைப் பூட்டிக் கொண்டு தியானத்தில் அமர்ந்தார். அதற்கு முன் தன் பக்தர்களை அழைத்து அந்த மயானத்தில் நடக்கும் எந்த விதமான விபரீத காட்சி தரும் செயல்களைக் கண்டும் பயப்பட வேண்டாம் என்று கூறி விட்டு கடவுள் மீது பாரத்தைப் போட்டு விட்டு அமைதியாக இருக்கும்படிக் கூறினார். ஒரு நாள் பெரிய பேய் ஒன்று அவரைத் தாக்க வந்த பொழுது அதைத் தன் தண்டத்தினால் அடித்து விரட்டினார். ஏழாவது நாளன்று அசரி ஒன்று ஸ்வாமிகளை எழுந்திருக்கும்படிக் கூறிற்று. தன் உயிரே போனாலும் பழனி ஆண்டவர் தன் முன் வந்தால் ஒழிய எழுந்திருக்க மாட்டேன் என்றவரிடம் " உன்னுடைய கடவுள் நான் வந்துள்ளேன். கண்களைத் திறந்துப் பார் " என்ற குரல் கேட்டு கண்களை விழித்துப் பார்த்த ஸ்வாமிகள் தன் எதிரில் பழனி ஆண்டவர் ஒரு சின்னத்துடனும் பக்கத்தில் இரண்டு ரிஷிகளுடன நிற்பதைக் கண்டார். அதன் பிறகு பழனி ஆண்டவர் அவருடைய வலது காதில் ஒரு மொழிச் சொல்லான உபதேசத்தை செய்தார்.

அவருடன் அங்கு வந்தவர்கள் அதன் பின் கிழக்கு நோக்கிச் சென்று விட்டனர். அதனால் மகிழ்சியுற்ற பாம்பன் ஸ்வாமிகளும் 28 நாட்கள் அன்ன ஆகாரம், உறக்கம் இன்றி தியானத்தை செய்து முடித்தார். 35 வது தினத்தில் மீண்டும் ஒரு அசரி அவரை வெளியில் வருமாறு கூற, மீண்டும் ஸ்வாமிகள் தன்னுடைய கடவுள் வந்து கூறினால் ஒழிய வர மாட்டேன் என்றார். " நானேதான் வந்துள்ளேன் வந்து பார் " என்ற குரலைக் கேட்டு வெளியில் வந்தவர் சித்திரைப் பௌர்ணமியின் முழு உருவான சந்திரனைப் போன்றவரைக் கண்டார். அந்த நேரத்தில் பாம்பன் ஸ்வாமிகள் ஆண்டியைப் போல ஒரு கோவணம் மட்டுமே உடுத்தி இருந்தார். அதன் பின்

அவருடைய பக்தர்கள் கேட்டுக் கொண்டபடி தோளில் ஒனறும், இடுப்பை சுற்றி ஒன்றுமாக மெல்லிய வேட்டித் துணியைக் கட்டிக் கொண்டார். அவர் அதிகம் பேசவில்லை என்றாலும் அவருடைய அனுபவங்களைக் கூறுமாறு பக்தர்கள் வேண்டினர். இன்றைக்கும் அவர் தியானத்தில் இருந்த இடத்தில் அவர் உபயோகித்த எண்ணை விளக்கை இராமநாதபுரத்தில் அவருடைய பக்தர்கள் பாதுகாப்பாக வைத்து உள்ளனர்.

1895 ஆம் ஆண்டில் சன்யாசத்தை ஏற்ற பாம்பன் ஸ்வாமிகள் பாம்பன் நகரை விட்டு வெளியேறினார். ஒரு நாள் அவர் கனவில் தோன்றிய முருகன் அவரை சென்னைக்குச் செல்லுமாறு கூறினார். அங்கு அவருக்கு ஒருவரையும் தெரியாது என்பதினால் சற்று தயங்கியவர் முருகன் இட்ட ஆணையை ஏற்று இரயில் மூலம் அங்கு சென்றார். எக்மோர் ஸ்டேஷனில் இறங்கிய அவரை முன்பின் பார்திராத ஒருவன் தன்னுடன் வந்து வண்டியில் அமர்ந்து கொள்ளுமாறு அழைத்தான். ஒரு வார்த்தைக் கூட கூறாமல் ஜட்கா ( ஒரு வித வண்டி) வில் அமர்ந்தவரை செயின்ட் ஜார்ஜ் டவுனில், 41 ஆம் எண், வைத்தியநாத முதலித் தெருவில், ஒரு வீட்டில் அவரை விட்டுவிட்டுச் செல்ல உள்ளிருந்து வெளிவந்த பங்காரு அம்மாள் என்ற மூதாட்டி அவரை எதிர் பார்த்து நின்று இருந்தது போல் வரவேற்றார். அவள் கூறினாள் முதல் நாள் இரவில் தன் கனவில் வந்த முருகன் மறு நாள் காலையில் ஒரு சன்யாசி அவள் வீட்டிற்கு வருவார் என்றும், அவருக்கு தங்க இடமும் உணவும் தரும்படிச் சொன்னதினால் அவரை அங்கு அழைத்து வர ஏற்பாடு செய்ததாக கூறினாள். அவரும் அதை ஏற்று சில நாட்கள் அங்கு தங்கினார். 1896 ஆம் ஆண்டில் சிதம்பரம் சென்ற ஸவாமிகள் அங்கு தாகராலய இரகசயம் என்ற உபனிஷத்தை எழுதினார். குகக் கடவுள் அனைவரிடமும் எதோ ஒரு அளவில் இருக்கிறார். வேதங்கள், உபனிஷத்துக்கள், அகமங்கள் தேவாரம், திருப்புகழ் என பலவற்றில் இருந்தும் பல உதாரணங்களை பாம்பன் ஸ்வாமிகள் அதில் காட்டி உள்ளார். அதைத் தவிற திரோபா, பிபூரனோத் ப்ராதானா ( ***Tiropa*** **and** ***Paripuranat bthana)*** என்ற இரு நூல்களையும் அவர் எழுதினார். அதில் அவர் 108 உபனிஷத்தக்களில் இருந்து மேற்கோள்களைக் காட்டி உள்ளார்.

பாம்பன் ஸவாமிகளுக்கு தமிழ் மீது இருந்த பற்றினால் 50 பாடல்களை வேறு எந்த மொழி கலப்பும் இன்றி எழுதி உள்ளார். அப்படி எழுதியவர்கள் வேறு எவரும் இல்லை. " எவர் சமிஸ்கிருத மொழியையும் தமிழையும் பழிக்கின்றானோ அவன் எனக்கு எதிரி என்றும் அந்த இரண்டு மொழிகளும் இரு கண்களைப் போன்றவை, இறைவீகத்தை அறிந்து கொள்ள வேண்டும் எனில் இரண்டும் அவசியமே " என்று கூறினார். வாரணாசிக்குச் சென்ற அவர் குமாரகுருபதர் மடத்தில் தங்கினார். அங்கு மிக மகிழ்சியுடன் இருந்தார். ஒருநாள் அவரிடம் வந்த ஒருவர் வெண்ணிர ஆடைகளுக்குப் பதிலாக காவி உடையை அணிந்து கொள்ளும்படிக் கூற முதலில் தயங்கியவர் சற்று யோசித்தப் பின் அதுவும் கடவுளின் சித்தமே என்று எண்ணிவிட்டு அன்று முதல், காவி உடைகளையே அணியத் துவங்கினார்.

ஒருமுறை சஷ்டி பூஜையில் அவர் கலந்து கொண்ட பொழுது அங்கிருந்தவர்கள் சுமார் 100 பேர்கள் சாப்பிடும் அளவில் மட்டுமே உணவு தயாரித்து இருந்தனர். அவர்கள் அரிசி வேக வைத்த அண்டாவில் 400 பேர்களுக்கு சமைக்க முடியும். வந்திருந்த மக்களுக்கு செய்திருந்த உணவு பற்றாமல் போய் மூன்று முறை சாம்பார், ரசம் கறிகாய் போன்றவற்றை செய்ய வேண்டியதாயிற்று. ஆனால் ஸ்வாமிகளின் அருளினால் அரிசி சாதம் மட்டும் எடுக்க எடுக்க வந்து கொண்டே இருந்தது போன்ற அற்புதங்கள் ஸ்வாமிகளின் சரித்திரத்தில் சாதாரணமானவை.

அவர் சென்னையில் தங்கி இருந்த பொழுது ஞானக் கண்ணால் தன் தாயாரும், தன்னுடைய பெரிய மகனும் இறந்து விட்டதைத் தந்தி வரும் முன்னரே தெரிந்து கொண்டு விட்ட பின் தான் ஒரு சன்யாசி என்பதால் அது குறித்துக் கூறி தன்னை எவரும் தொந்தரவு செய்யக் கூடாது என

கட்டளை இட்டார். சிதம்பரத்தில் பினத்துார் என்ற இடத்தில் இருந்த பொழுது வினிதா என்ற வைணவர் அவருக்கு ஏவல்களை செய்து கொல்ல நினைத்தார். பாம்பன் ஸ்வாமிகளிடம் அந்த பேய் சென்ற பொழுது " நான் எந்த தவறும் செய்யவில்லை. போ ...... போய் யார் எனக்கு ஏவல் வைத்தார்களோ அவர்களிடமே திரும்பிச் செல் என வந்த பேயைத் திருப்பி அனுப்பி விட்டார். மறு நாள் அந்த வினிதா திடீரென மரணம் அடைந்து விட்டான்.


சிவனையும், சைவர்களையும் பழித்தவர்கள் மீது வழக்கு போட்டு ஏழு வருடங்களாக நடந்த வழக்கு மன்ற விசாரணையில் முருகனின் அருளால் அனைத்திலும் வெற்றி பெற்றார். நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் மற்றும், சமய சாரபம் போன்ற வைஷ்ணவ நூல்களின் ஆராய்சிக் கட்டுரைகளை அவர் வெளியிட்டார். அவர் வெளியிட்ட அனைத்து 500 புத்தகங்களையும் வைஷ்ணவர்களே வாங்கிக் கொண்டு அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அவற்றை எரித்து விட்டனர். 1923 ஆம் ஆண்டில் தம்புச்செட்டித் தெருவில் நடந்த விபத்தில் அவருடைய இடது முழங்காலில் ஜட்கா ஏறி முழங்கால் ஒடிந்தது. பொது மருத்துவ மனைக்கு அவர் பக்தர்கள் அவரைக் கொண்டு போக, மருத்துவர்கள் அவருடைய காலை வெட்டி எடுத்து விட வேண்டும் என அறிவுறுத்தினர். அதைக் கேட்ட ஸ்வாமிகள் அவர்கள் என்ன கூறுகிறார்களோ அதை செயவும் என்று தன் நண்பர்களிடம் கூறிவிட அங்கு வந்திருந்த சின்னசாமி ஜோதிடர் என்பவர் கந்தர் சஷ்டிக் கவசத்தைப் படிக்கத் துவங்கினார்.

அவர் கனவில் ஒரு வேல் வந்து பாம்பன் ஸ்வாமிகளின் முறிந்து போன காலில் நுழைந்தது போல காட்சி வந்தது. அதற்கு அடுத்த சில நாட்களிலேயே பாம்பன் ஸவாமிகளின் கால் முற்றிலும் குணமாயிற்று. ஆங்கில மருந்துவர்கள் கூட அந்தப் பின்னணியின் காரணம் தெரியாததினால் அவர் குணமடைந்தது அதிசயமான ஒன்று எனக் கூறி வியந்தனர். பதினோறாம் நாள் தன் படுக்கைக்கு அருகில் இரு மயில்கள் தோகை விறித்தாட சிறுவன் வடிவில் முருகன் நின்று கொண்டு இருந்ததைக் கண்டார். ஆகவே முருகனை நம்பி தவறாமல் மயூர வாகன சேவை விழாவை நடத்துமாறு மகா தேஜோ மண்டல சபையினரிடம் ஸ்வாமிகள கூறினார்.

வேலும் மயிலும் துணை என்பது பொய் அல்ல என தன் மூலம் நிருபித்தார் தனக்கு முடிவு காலம் நெருங்கி விட்டதை அறிந்து கொண்ட ஸ்வாமிகள் சின்ன சாமி ஜோதிடரை அழைத்து திருவான்மியூர் அருகில் ஒரு இடம் தேடுமாறு கூறினார். அவர் கால்களை விரித்துக் கொள்ள கால்களுக்கு இடையிலான அந்த அளவை எடுத்துக் கொண்டு அதே அளவில் ஒரு இடத்தை வாங்கினர். 1929 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் தேதி காலை 7.15க்கு தன் பக்தர்களை அழைத்த ஸ்வாமிகள் முருகனை நம்பிக் கொண்டு இருக்கும்படிக் கூறிவிட்டு தன் மூச்சை நன்றாக உள் இழுத்துக் கொண்டு அமர்ந்தபடி சமாதி ஆனார்.

பாம்பன் ஸவாமிகள் பரப்பிருமம்னான சிவனை வழிபட்டு வந்தாலும் சுப்பிரமண்யரும் அவருடைய ஒரு அங்கமே என நம்பினார். முருகன் மீது இருந்த அளவற்ற பக்தியின் காரணமாக சுப்பிரமண்ய வேயசம் என்ற நூலில் இதைத் தெளிவு படுத்தி உள்ளார். குமார குருதாச ஸ்வாமிகள் என்ற பெயரை பாம்பன் ஸ்வாமிகள் பெற்றார். பாம்பனில் வளர்ந்ததும் வெளியேறிய இடமுமான பாம்பன் என்ற ஊரின் மகிமையைக் குறிக்கும் விதத்தில் அவர் பாம்பன் ஸ்வாமிகள் என்றும் அழைக்கப் பட்டார். பாம்பன் ஸவாமிகளின் உண்மைப் பெயர் அதியசர்ம சுதா விதிக சைவ சித்தாந்த கணபானு (**Atiyaserma Sudha Vithiga Saiva SiddhantaGanabanu**) என்பதாகும் அவர் தச மார்க சைவ சித்தாந்த வைதேக சுத்த அத்வைத்தின் பாதையில் சன்யாசத்தை ஏற்றார். அவர் 6666பாடல்கள் , 32 வியாசங்கள், மற்றும் முருகனின் 1000 பெயர்களையும் தன் வாழ்க்கையில் எழுதினார். அவர் எழுதிய ஞானமூர்த்தம் என்ற நூல் இரு உலகிற்கும் ஏற்றவை. தமிழ்

இலக்கணப்படி 130 விதமான பாடல்களை எழுதினார். ஸ்வாமிகள் அக பூஜா என்ற அடக்கமான பூஜையினையே ஆடம்பர பூஜைக்கு பதிலாக விரும்பினார்.



**திருவான்மியூர் கடற்கரையில் முருகனின் நினைவோடு அமர்ந்து இருந்த ஸ்வாமிகள் சாமாதி எய்த பொழுது எடுத்தப் படம்**